# நடப்பு நிகழ்வுகள் ஜனவரி 8, 2018

- 2017 ஆம் ஆண்டில் ஸ்ரீலங்கா நாட்டிற்கு அதிகமாக சுற்றுலா மேற் கொண்டவர்களின் பட்டியிலில் இந்தியா முதலிடத்தைப் பெற்றுள்ளதாக அந்நாட்டின் சுற்றுலாத்துறை அறிவித்துள்ளது.
- இந்தியா - இஸ்ரேல் நாடுகளின் உறவுகளை போற்றும் வண்ணம், புது தில்லியிலுள்ள "தீன் மூர்த்தி சவுக்" என்ற இடத்திற்கு இஸ்ரேலிலுள்ள ஹா.்.ப்பா நகரத்தின் பெயரைச் சேர்த்து "தீர் மூர்த்தி ஹா.்.ய்ப்பா என பெயரிடப்பட்டுள்ளது.
- "வஜ்ரா பிரகார் (Vajva Prahar) இந்திய அமெரிக்க நாடுகளின் கூட்டு இராணுவப் பயிற்சி வஜ்ரா பீரகார் எனும் பெயரில் ஜனவரி 2018 மூன்றாம் வாரத்தில் வாசிங்டனிலுள்ள சியாட்டில் நகரில் நடைபெறவுள்ளது.
- இந்தியாவும் பாகிஸ்தானும் தங்கள் நாட்டில் உள்ள அணுசக்தி நிலையங்களின் பட்டியலை தூதராக அதிகாரிகள் மூலம் 01.01.2018 அன்று பரஸ்பரம் பரிமாறிக் கொண்டன.
- மும்பையிலிருந்து கடல் மார்க்கமாக ஹஜ் பயணம் மேற்கொள்ள சவுதி அரசுடன் இந்தியா ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.
- இந்தியா மற்றும் இந்தோனேசியா இடையே தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் கூட்டம் 09.01.2018 அன்று நடைபெற்றது.
- இஸ்ரேல் பிரதமா் 6 நாட்கள் பயனமாக இந்தியா வந்துள்ளாா். 14.01.2017 அன்று வந்துள்ளாா். 15yrs பிறகு இஸ்ரேல் பிரதமா் இந்தியா வருவது இதுவே முதல் முறை.
- "சாரெக்ஸ் - 18" என்ற பெயரில் இந்தியா மற்றும் ஜப்பான் நாடுகளின் கடலோரக் காவல் படையினரின் கூட்டு பயிற்சி சென்னை துறைமுகத்தில் நடைபெற்றது.
- மத்திய அரசின் "பொலிவுறும் நகரங்கள்" (ஸ்மார்ட் சிட்டிக்கள்) பட்டியலில் ஈரோடு சேர்ப்பு ஏற்கனவே தமிழ்நாட்டில் சென்னை, கோவை, திருநெல்வேலி தூத்துக்குடி, திருச்சி போன்ற நகரங்களும் இந்த பட்டியலில் இடம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.
- இந்தியாவில் அதிக வாசகர்கள் படிக்கும் முதல் 10 பத்திரிக்கைகளில் 5 வது இடத்தில் "தினந்தந்தி" உள்ளது. முதல் இடத்தில் டைனிக்ஜக்ரான்" என்ற இந்தி பத்திரிக்கையும் 2 இந்துஸ்தான் 3 அமர் உஜலா 4 வது டைனிக் பாஸ்கர் பத்திரிக்கையும் உள்ளது.